# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in; email:registrar@tnteu.ac.in


**Lr. No.TNTEU/R/TRB-TET/ 2018-19/1532** **Date: 25.07.2018**

முனைவர் நா.ரவீந்திரநாத் தாகூர், Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்

முதல்வர்கள், பல்கலைக்கழக இணைவு பெற்ற
அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** பி.எட் பட்டப்படிப்பு முடித்து ஆசிரியராக அரசு பள்ளிகளில் பணி நியமனம் பெற அரசின் புதிய ஆணை – கல்வியியல் கல்லூரிகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (நிலை) எண்: 149, பள்ளிக்கல்வி (ஆ.தே.வா) துறை, நாள் 20.07.2018.

------

தமிழக அரசு பார்வையில் கண்ட அரசாணையின் வாயிலாக, பி.எட் பட்டபடிப்பு முடிக்கும் மாணவ மாணவிகள் **அரசு பள்ளிகளில் ஆசிரியர் பணியில் சேருவதற்குத் தேவையான புதிய நடைமுறைகளைப்** பள்ளிக் கல்வித்துறை விவரமாக தெரிவித்துள்ளது.

1. புதிய அரசாணயின்படி, மாணவ மாணவிகள் பி.எட் பட்டபடிப்பு முடித்தவுடன், ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் **ஆசிரியர் தகுதித்தேர்வில்** (TET) தேர்ச்சி பெற வேண்டும்.

2. ஒவ்வோர் ஆண்டும், அரசு பள்ளிகளில் ஏற்படும் காலி பணியிடங்களுக்கேற்ப, ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் போட்டித் தேர்வில் (Competitive Exam) கலந்து கொண்டு வெற்றி பெற வேண்டும்..

3. தகுதித்தேர்வில் வெற்றிபெற்றவர்கள் மட்டுமே போட்டித்தேர்வில் கலந்து கொள்ள முடியும்.

4. ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் போட்டித்தேர்வில் பெறப்படும் மதிப்பெண், இனசுழற்சி ஆகியவற்றின் அடிப்படையில் ஆசிரியர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

எனவே, கல்லூரி முதல்வர்கள், அரசாணையில் குறிப்பிட்டுள்ள இரண்டு வகையான தேர்வுகள் (**தகுதித் தேர்வு, போட்டித்தேர்வு**) பற்றிய விவரங்களை பி.எட் பயிலும் மாணவ மாணவிகளின் கவனத்திற்கு உடனே கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், பி.எட் பட்டப் படிப்பில் ஒவ்வொரு மாணவரையும் உயர்தரத்தோடு வெற்றி பெற வைப்பதற்காக, கல்லூரிகள் மாணவர்களுக்கு வேலைநாட்கள் அனைத்திலும் முறையாக, தகுதிவாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு பாடம் நடத்த வேண்டும். தகுதி, போட்டித்தேர்வுகள் மாணவர்கள் எளிதில் வெற்றி பெறும் வகையில் கல்வியியல் கல்லூரியில் நூலகங்கள் தரம் உயர்த்தப்பட வேண்டும.

மாணவ மாணவிகளைப் பி.எட் பட்டப்படிப்பில் வெற்றி பெறுவதற்குக் கவனம் செலுத்தச் செய்வதோடு, கூடுதலாக தகுதித்தேர்வு, போட்டித்தேர்வு தொடர்பான விவரங்களை மாணவர்களுக்கு தொடர்ந்து வழங்கிட வேண்டும் என அனைத்து முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

26/7/18

**பதிவாளர் (பொ)**

__குறிப்பு:__ இந்தச் சுற்றறிக்கையை கல்லூரித் தகவல் பலகையில் மாணவர்களது பார்வைக்கு வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.